[26th March 1969

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, Dynamite போன்ற மருந்து பல்லாவரத்தில் செய்கிறார்கள். அதைக் கொண்டு சாதாரணமாகக் குழி போடுகிற இடங்களில் வெடித்தால் பயனுள்ள வகையில் கிணறுகளை வெட்டுவதற்கு உபயோகமாகிறது. அது மாதிரி திட்டத்தைப் பரவலாக ஆக்குதவற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இப்போது பல்லாவரத்திலிருந்து தான் வருகிறது. சென்னை என்று குறிப்பிட்டிருப்பது பல்லாவரத்தைத்தான்.

மாண்புமிகு திரு எம். முத்துசாமி : பல்லாவரம் என்ற ஒரேயிடத்தில் இதை வைத்திருப்பதால், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்கு அது தொல்லையாக இருப்பதைக் கருதி, ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை ஏஜெண்டுகள் நியமித்து அவற்றை வினியோகிக்க முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அது பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. பி. டி. முத்து: இந்தத் தோட்டா மருந்து விற்கும் லைசென்சு முறையில், ஒரு சிலரே முப்பது, நாற்பது லைசென்சுகளை வைத்துக்கொண்டு ஒரு ரூபாய்க்கு விற்க வேண்டியவற்றை ரூ. 4 அல்லது ரூ. 5 என்ற அளவுக்கு விற்று வருவது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படிப்பட்ட தகவல் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Rat menace

* 220 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether a grant for killing the rats at the rate of 10 Paise per rat was requested at the Agricultural Seminar held at Thanjavur during July 1968; and

(*b*) if so, the action taken by the Government thereon ?

எலித் தொல்லை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜூலையில் கூடிய தஞ்சை விவசாயக் கருத்தரங்கில் எலி ஒன்றுக்கு 10 பைசா கொடுத்து எலியைக் கொல்ல மான்யம் கோரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அரசு இதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) அத்திட்டத்தினால் ஏற்படும் செலவு மிக அதிகமாக இருக்குமாதலாலும், அவ்வாறு தொகை கொடுப்பதில் நடைமுறையில் இடர்பாடுகள் ஏற்படுமாதலாலும் அக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, எலியினால் வருகிற உணவு நஷ்டம் எவ்வளவு இருக்குமென்று ஏதேனும் மதிப்பீடு இருக்கிறதா ? அதைப் பற்றி மதிப்பீடு செய்து, தவளைகளைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் போல சைனா போன்ற நாடுகளுக்கு எலிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்தால், செலவில்லாமல் நஷ்டம் தவிர்க்கப்படுமென்பதை அரசு உணருகிறதா ?

26th March 1969]

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : எலிகளைப் பிடிப்பதற்கு தவளைகளை விட வேண்டுமென்று ஒரு யோசனை சொல்லப்படுகிறது. பாம்பை பயன் படுத்த வேண்டுமென்று ஒரு யோசனை இருக்கிறது. எலிகளைப் பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது என்ற கருத்து சரியல்ல. இப்போது தஞ்சை மாவட்டத்தில் உள்ள எலிப் பிரச்னையைத் தவிர்க்க பாம்பாலும் தவளையாலும் முடியாது. எலிகளைப்பிடிக்க 10 பைசா வீதம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அப்படிக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒரு எக்கருக்குக் குறைந்த பட்சம் 15 எலிகள் இருக்கும் என்று கணக்கு போட்டுப் பார்த்தால் ஒரு கோடி 80 லட்சம் எலிகள் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. அது கூட சரியான கணக்கு என்று சொல்ல முடியாது. தஞ்சையில் சென்று நான் நேரில் பார்த்தபோது அங்குள்ள ஏராளமான எலிகளைப் பிடிக்க வேண்டியிருக்கும் நிலைமையைப் பார்த்தால் இந்தப் புள்ளி விவரத்தை விட அதிகமாகத்தான் இருக்குமென்று தெரிகிறது. பாம்பு, தவளை என்ற பிரச்சினை அங்கே முடியாது.

திரு சா. கணேசன் : சைனு முதலிய பகுதிகளுக்கு எலி மாமிசங்களை அனுப்பலாம் என்ற நிலை வருவதால் கேட்கவேண்டியிருக்கிறது. சைனுக்காரர்கள் எலி மாமிசங்களை வாங்கத் தயாராக இருக்கிறார்களா ? இப்போது அப்படி எலி மாமிசம் அவர்களுக்குத் தேவை என்று அரசாங்கத்துக்கு ஏதேனும் வேண்டுகோள் அல்லது டிமாண்ட் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : சைனுவுக்கும் நமக்கும் அப்படிப் பட்ட தொடர்பு எதுவும் இல்லை.

திரு வி. கே. ராமசாமி முதலியார் : எலித் தொந்தரவு அதிகமாக இருப்பதால் 10 பைசா கொடுக்க முடியாவிட்டாலும் ஒரு பைசா வீதமாவது கொடுத்து உதவ சர்க்காருக்கு யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி: ஒரு பைசா கொடுத்தால் நிச்சயமாக அதற்கு ஆள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படும். ஆகையால் எலி பாஷாணத்தை வைத்துக் கொல்வதற்கு முதலில் 5 லட்சம் எக்கருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மத்திய சர்க்கார் துணை கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு எஸ். ஜெயராம ரெட்டியார் : என்னுடைய நண்பர் தஞ்சை மிராசுதாரராக இருக்கிறார். வலிவலம் தேசிகர் அவர்கள் சென்ற 20 வருஷமாக விவசாய சம்பந்தமான தொடர்பு கொண்டிருக்கிறார். எலிகளைக் கொல்லுவதற்கு ஒரு எலிக்கு இரண்டு அணா வீதம் கொடுத்து வருகிறார். அவரைக் கேட்டால் அந்த இரண்டணா செலவானால் கூட தன்னுடைய எஸ்டேட்டில் எட்டு அணா ஒன்பது அணா பெறுமான நெல் எலிகளால் பாதிக்கப்படாமல் மிச்சமாகிறது என்கிறார். அதனால் ஆயிரக் கணக்கான ரூபாய் லாபம் வருகிறது. தொடர்ச்சியாக அதைச் செய்து வருகிறார். அந்த முறை நல்ல விதமான பலனைக் கொடுப்பதால் அந்த மாதிரி Allowance கொடுக்கச் சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது பொறி வைத்துப் பிடிக்கும் முறையைத்தான் வலிவலம் தேசிகர் கையாளுகிறார். அவர் மட்டுமல்ல. தஞ்சையில் விவசாயிகள் பலரும் அதையே கையாளுகிறார்கள். அரசாங்கம் எலி பாஷாணத்தை வைத்துக் கொல்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அந்த மருந்தை இலவசமாகக் கொடுக்கிறார்கள். தனிப் பட்டவர்கள் சொந்த முறையில் செலவு செய்தால் அது லாபகரமாகத் தான் இருக்கும். நெல் கதிர் விடுகிற நேரத்தில் எலிகள் கத்தரித்து விடுவதால்தான் நஷ்டம் ஏற்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : In view of the abuses that are likely to creep in in granting subsidy for catching rats, may I know from the Hon. Minister whether the Agriculture Department will take it as a serious programme, because it is estimated

[26th March 1969

that over 6 million tonnes of grain are lost in India because of the rats and sparrows and whether, instead of giving subsidy, the Agriculture Department will itself undertake a pilot scheme in an area to find out the efficacy of removing rats by distributing rat poison ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : அறுவடை முடிந்த பிறகு பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் வரப்புகளை வெட்டி, எலி வலைகளை வெட்டி எடுப்பதன் மூலம் அவைகள் அகற்றப்படுகின்றன. நெல்லைச் சாப்பிட்டு கொழுத்து நிறைய குஞ்சுகளை பொறித்து குடும்பத்தைப் பெருக்கியிருக்கிற நிலையில் அவைகளை அழிப்பதில் ஈடுபடவேண்டும். வெயில் காலத்தில் ஜூன் மாதங்களில் அவைகளை வளையிலிருந்து வெளியே வருவதற்கான ஃப்ளாஷ் லைட், அரிக்கேன் லைட் போட்டு வெளியில் கொண்டு வந்து அவற்றைக் கொல்லுகிறார்கள். அதற்கு மேலாக எலி பாஷாணத்தை உபயோகிக்கிறோம். மத்திய அரசிடம் இது பற்றிய திட்டம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் நமக்கு ஆதரவு கொடுத்தால் எலித் தொல்லைகளை அகற்ற முடியும். சைனாவிலிருந்து எலி எதுவும் கேட்கவில்லை. ஏதோ ஒரு மாநிலத்தில் கூட எலிக்கறி சாப்பிடலாமென்று சொல்லியதாகப் பத்திரிக்கையில் பார்த்திருக்கிறேன். அந்த மாநிலத்திலிருந்து கூட கோரிக்கை எதுவும் நமக்கு வரவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : தஞ்சையில் நடந்த விவசாயக் கருத்தரங்கில் எலிகளைக் கொல்லுவதற்காகக் கொடுக்கப்படும் 10 பைசா போதாது, அதிகமாகக் கொடுத்தால் ஏராளமான எலிகளைப் பிடிக்கலாம் என்று சொல்லப்பட்டது. எலிகளின் வால்களை வெட்டிக் கொண்டு வந்து காட்டினால் எத்தனை வால் என்று பார்த்து ஒவ்வொன்றுக்கும் 10 பைசா வீதம் கொடுக்கலாம் என்றும் பஞ்சாயத்து யூனியன் சார்பில் அதைக் கொடுக்கலாம் என்றும் முடிவு சொல்லப்பட்டது. ஆனால் இதில் உள்ள சிரமம் அரசாங்கத்துக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. வால்களைக் காட்டும்போது எந்த எலி முன்னால் பிடித்தது ; அதே எலியின் வால்தானா அல்லது மறுபடியும் பிடித்த எலியின் வாலா என்று கண்டுபிடிக்கமுடியாது. அதனால் அதிகமான பணத்தைச் சிலர் சாப்பிடக்கூடிய நிலைமை உண்டாகும். இதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : அரசாங்கத்திற்கு மிச்சமாகும் யோசனையைத்தான் சொல்லுகிறார்கள். வாலைக் கண்டுபிடிப்பதில் அது சுண்டெலியின் வாலா பெருச்சாளியின் வாலா என்று அறிவதற்கு ஒரு ஆபீசரைப் போட வேண்டிவரும். அந்த கஷ்டங்களையெல்லாம் பார்த்தால் எலி பாஷாணத்தையே உபயோகிப்பது சிறந்தது என்று தெரிகிறது.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : அதிகமாக எலிகள் உள்ள பிரதேசங்களில் பூனைகளை அதிகமாக வளர்க்க அரசாங்கம் திட்டம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : பூனைகள் அந்த அளவுக்குக் கிடைக்காது. நிலங்களுக்குப் பூனைகளை அனுப்பிவிட்டால் வீடுகளில் எலிகளின் தொந்தரவு அதிகமாகிவிடும்.

MR. CHAIRMAN : It is said that the rat population **is four** or five times greater than the human population and there is **a** move in some countries to adopt family planning among the rats. (Laughter.)

Gang Mazdoors

* 226 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Gang Mazdoors made a representation to the Government to make their job permanent ; and

(*b*) if so, the action taken thereon ?